# ஆங்கிலம் கற்றுக்கொள்ளுங்கள்

## புதிதாக கனடாவுக்கு வந்தவர்களுக்கான மொழிக் கல்வி (Language Instruction for Newcomers to Canada - LINC)

நீங்கள் பீல் பிரதேசத்திற்கு வந்ததும், ஆங்கிலம் கற்றுக்கொள்ள விரும்பினால், நீங்கள் புதிதாக கனடாவுக்கு வந்தவர்களுக்கான மொழிக் கல்வி (Language Instruction for Newcomers to Canada - LINC) வகுப்பில் சேர விண்ணப்பிக்கலாம். LINC வகுப்புகள் இலவசமானவை. அவற்றில் வேலை தேடக்கூடியவர் மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வயதுவந்தவரும் கற்கலாம்.

இந்த வகுப்புகள் பீல் பிரதேசம் மூழுவதும் பல்வேறு இடங்களில் சமூக அமைப்புகள், குறிப்பிட்ட இனம் சார்ந்த அமைப்புகள், டஃபரின்-பீல் கத்தோலிக்க மாவட்டப் பள்ளி அமைப்பு (Dufferin-Peel Catholic District School Board), ஷெரிடன் கல்லூரி (Sheridan College) ஆகியவற்றால் அளிக்கப்படுகின்றன.

இந்த வகுப்புகள்:

- தகுதியுள்ள வயதுவந்தோருக்கு இலவசம்
- முழுநேர மற்றும் பகுதிநேர வகுப்புகள், வார இறுதிகளிலும் மாலை நேரங்களிலும் நடத்தப்படுகின்றன
- நீங்கள் வகுப்பில் இருக்கும்போது இலவச குழந்தை கவனிப்பை அளிக்கின்றன
- போக்குவரத்து வசதி அளிக்கலாம்

கனடியப் பிரஜைகளுக்கும் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கும் LINCஇல் சேரத் தகுதியில்லை.

### LINC வீட்டில் கற்றல்

இது பல காரணங்களால் வகுப்பறைப் பாடங்களுக்கு வர முடியாத, கனடாவிற்குப் புதிதாக வந்தவர்களுக்கான இலவச மொழிப் பயிற்சித் திட்டம். நீங்கள் உங்கள் வீட்டிலேயே படிக்கலாம். ஒவ்வொரு வாரமும் ஆசிரியருடன் தொடர்பில் இருக்கலாம்.

LINC வீட்டுப் படிப்புத் திட்டத்திற்குத் தகுதிபெற நீங்கள்:

- உங்கள் தற்போதைய ஆங்கில மொழித் திறனின் மதிப்பீட்டுக்கு உட்பட வேண்டும்
- 17 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினராக இருக்க வேண்டும்
- நிரந்தர வசிப்பாளராக இருக்க வேண்டும் அல்லது நிரந்தர வசிப்பாளர் அந்தஸ்து வழங்க கனடாவின் புலம்பெயர்வுத் துறை திட்டமிட்டிருக்கிற, நிரந்தர கனடியப் பிரஜை ஆகாத, கனடாவில் இருக்க அனுமதிக்கப்பட்ட ஒரு புதியவராக இருக்க வேண்டும்.

கனடியப் பிரஜைகளுக்கும் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கும் LINCஇல் சேரத் தகுதியில்லை என்பதை மனதில் கொள்வது முக்கியம்.

**உங்கள் தற்போதைய ஆங்கிலத் திறனை மதிப்பிட்டுக்கொள்ளும் இடம்**

ஒரு LINC வகுப்பில் சேருவதற்கு முன் உங்கள் ஆங்கில மொழித் திறனை சோதித்துக்கொள்ள, அருகிலுள்ள பீல் மொழி மதிப்பீட்டு மையத்தை (Peel Language Assessment Centre) தொடர்பு கொண்டு ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

மொழி மதிப்பீடு என்பது ஒரு வெற்றி-தோல்வித் தேர்வு அல்ல. அது எந்த வகுப்பு உங்களுக்கு அதிக நன்மை அளிக்கும் என்று கண்டறிய ஒரு வழி.

உங்கள் மதிப்பீட்டிற்குப் பின், எங்கே, எப்போது பதிவு செய்துகொள்ள வேண்டும், நீங்கள் எந்தப் பள்ளிக்குச் செல்வீர்கள் ஆகிய தகவல்கள் உங்களுக்கு அளிக்கப்படும்.